**செய்தி வெளியீடு எண்: 922** **நாள்: 05.07.2024**

**செய்தி வெளியீடு**

**<u>ஒளிப்பதிவில் நிபுணுத்துவம் பெற்ற திரைப்பட ஒளிப்பதிவாளர் பத்மஸ்ரீ.திரு. எஸ்.சந்தோஷ் சிவன், ASC, ISC அவர்களின் சிறப்பு கருத்தரங்கம் சென்னை, தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் இன்று (05.07.2024) நடைபெற்றது.</u>**

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்தில் திரைப்படத்துறைக்கான கலை உணர்வுயையும், தொழில்நுட்ப பயிற்சிகளும் கருத்தியலாகவும் செயல்முறைகளாகவும் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, படத்தொகுப்பு, உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் மற்றும் எண்மிய இடைநிலை ஆகிய ஆறு பிரிவுகளில் திரைப்படத் தொழில்நுட்பங்கள் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் பயின்ற மாணவர்கள் இன்றைய திரைத்துறை பிரபலங்களாகவும், Puna Film Institute, ISRO, National School of Drama, Sathayajitray Film Institute, Doordharsan போன்ற மிகச் சிறந்த நிறுவனங்களில் பணிபுரிந்தும் இந்தியாவிலுள்ள பல்வேறு திரைப்படக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களாகவும் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் மாணவர்களின் பாடத்திட்டங்களில் ஒன்றாக நடத்தப்படும் முக்கிய திரைத்துறை ஆளுமைகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்று (05.07.2024) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், இந்திய அளவில் ஒளிப்பதிவாளர்களுக்கென பல்வேறு விருதுகளையும் குறிப்பாக ஒன்றிய அரசின் விருதுகளையும், தமிழ்நாடு அரசின் சார்ந்த ஒளிப்பதிவாளர்கள் விருதுகளையும் ஒளிப்பதிவாளர்களுக்கென சர்வதேச அங்கீகாரம் பெற்றவருமான
பத்மஸ்ரீ. திரு.எஸ்.சந்தோஷ் சிவன்,ASC, ISC அவர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. அவ்வமையம், மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தும் ஒளிப்பதிவு பற்றியும் , அதன் கூறுகள் பற்றியும், ஆவணத் திரைப்படம், குறும்படம் மற்றும் திரைப்பட பற்றியும் நுணுக்கங்களையும் எடுத்துகூறினார்.

இந்நிகழ்ச்சியின்போது, இந்நிறுவனத்தின் முன்னாள் மாணவர்களான திரு.ராஜீவ் மேனன், ஒளிப்பதிவாளர் அவர்கள், இயக்குநர்.திருமதி.பிரியா மற்றும் இயக்குநர் மற்றும் ஒளிப்பதிவாளருமான திரு.பிரேம்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, இந்நிறுவன முதல்வர் (மு.கூ.பொ) திரு.ஜெ.வே.மோகனகிருஷ்ணன் அவர்கள் வரவேற்றவதுடன், விருந்தினருக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu